# யூன்– 10 –பொதுக்கால10ம் வாரம் - ஞாயிறு

**“கடவுளின்திருவுளத்தைநிறைவேற்றுபவரேஎன் சகோதரரும்,சகோதரியும்,தாயும் ஆவர்’’ என்றார். ( மாற்கு 3:35)**

## முதல் வாசகம் : தொடக்க நூல் 3 : 9 – 15

ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் கூப்பிட்டு, ”நீ எங்கே இருக்கின்றாய்?” என்றுகேட்டார்.”உம்குரல் ஒலியை நான் தோட்டத்தில் கேட்டேன். ஆனால், எனக்கு அச்சமாக இருந்தது. ஏனெனில், நான் ஆடையின்றி இருந்தேன். எனவே, நான் ஒளிந்து கொண்டேன்” என்றான் மனிதன்.”நீ ஆடையின்றி இருக்கின்றாய் என்று உனக்குச்சொன்னது யார்? நீ உண்ணக்கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ?” என்று கேட்டார்.அப்பொழுது அவன், ”என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண், மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள் நானும் உண்டேன்” என்றான்.ஆண்டவராகிய கடவுள், ”நீ ஏன் இவ்வாறு செய்தாய்?” என்று பெண்ணைக் கேட்க, அதற்குப் பெண், ”பாம்பு என்னை ஏமாற்றியது, நானும் உண்டேன்” என்றாள்.ஆண்டவராகிய கடவுள் பாம்பிடம், ”நீ இவ்வாறு செய்ததால், கால்நடைகள், காட்டுவிலங்குகள் அனைத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய். உன் வயிற்றினால் ஊர்ந்து உன் வாழ்நாள் எல்லாம் புழுதியைத் தின்பாய்.உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்” என்றார்.அவர் பெண்ணிடம் ”உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன் வேதனையில் நீ குழந்தைகள் பெறுவாய். ஆயினும் உன் கணவன் மேல் நீ வேட்கை கொள்வாய் அவனோ உன்னை ஆள்வான்” என்றார்.

**பதில்பாடல் :** பேரன்பும் மீட்பும் ஆண்டவரிடமே உள்ளன.

## இரண்டாம் வாசகம் : 2 கொரிந்தியர் 4 : 13 – 5 : 1

சகோதர சகோதரிகளே! ”நான் கடவுள்மீது நம்பிக்கையோடு இருந்தேன் ஆகவே பேசினேன்” என்று மறைநூலில் எழுதியுள்ளது. அதற்கொப்ப நம்பிக்கை மனப்பான்மை கொண்டுள்ள நாங்களும் நம்புகிறோம் ஆகவே பேசுகிறோம்.ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச் செய்த கடவுளே எங்களையும் அவரோடு உயிர்த்தெழச் செய்து அவர் திருமுன் நிறுத்துவார். உங்களையும் அவ்வாறே நிறுத்துவார் என்பது எங்களுக்குத் தெரியும். இவையனைத்தும் உங்கள் நன்மைக்கே நிகழ்கின்றன. இறையருள் பெறுவோரின் தொகை பெருகப்பெருக அவர்கள் கடவுளுக்குச் செலுத்தும் நன்றியும் பெருகும். இதனால் கடவுள் போற்றிப் புகழப்படுவார்.எங்கள் உடல் அழிந்து கொண்டிருந்தாலும் எங்கள் உள்ளார்ந்த இயல்பு நாளுக்கு நாள் புதுப்பிக்கப்பெற்று வருகிறது. எனவே நாங்கள் மனந்தளருவதில்லை. நாம் அடையும் இன்னல்கள் மிக எளிதில் தாங்கக்கூடியவை. அவை சிறிது காலம்தான் நீடிக்கும். ஆனால் அவை ஈடு இணையற்ற மாட்சியை விளைவிக்கின்றன. அம்மாட்சி எள்றென்றும் நிலைத்திருக்கும். நாங்கள் காண்பவற்றையல்ல, நாங்கள் காணாதவற்றை நோக்கியே வாழ்கிறோம். காண்பவை நிலையற்றவை காணாதவை என்றென்றும் நிலைத்திருப்பவை. நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு. அது மனிதக் கையால் கட்டப்படாதது, நிலையானது என்பது நமக்குத் தெரியும் அல்லவா!

## நற்செய்தி : மாற்கு 3 : 20 – 35

அக்காலத்தில் இயேசு வீட்டிற்குச் சென்றார். மீண்டும் மக்கள் கூட்டம் வந்து கூடியதால் அவர்கள் உணவு அருந்தவும் முடியவில்லை.அவருடைய உறவினர் இதைக்கேள்விப்பட்டு, அவரைப் பிடித்துக்கொண்டுவரச் சென்றார்கள். ஏனெனில் அவர் மதிமயங்கி இருக்கிறார் என்று மக்கள் பேசிக்கொண்டனர்.மேலும், எருசலேமிலிருந்து வந்திருந்த மறைநூல் அறிஞர், ”இவனைப் பெயல்செபூல் பிடித்திருக்கிறது” என்றும் ”பேய்களின் தலைவனைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்” என்றும் சொல்லிக் கொண்டிருந்தனர்.ஆகவே அவர் அவர்களைத் தம்மிடம் வரவழைத்து அவர்களுக்கு உவமைகள் வாயிலாகக் கூறியது: ”சாத்தான் சாத்தானை எப்படி ஓட்டமுடியும்?தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் நிலைத்து நிற்கமுடியாது.தனக்கு எதிராகத்தானே பிளவுபடும் எந்தவீடும் நிலைத்து நிற்கமுடியாது. சாத்தான் தன்னையே எதிர்த்துநின்று பிளவுபட்டுப்போனால் அவன் நிலைத்து நிற்கமுடியாது. அதுவே அவனது அழிவு.முதலில் வலியவரைக் கட்டினாலன்றி அவ்வலியவருடைய வீட்டுக்குள் நுழைந்து அவருடைய பொருள்களை எவராலும் கொள்ளையிட முடியாது அவரைக் கட்டிவைத்த பிறகுதான் அவருடைய வீட்டைக் கொள்ளையிட முடியும்.உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தூய ஆவியைப் பழித்து உரைப்பவர் எவரும் எக்காலத்திலும் மன்னிப்புப்பெறார் அவர் என்றென்றும் தீராத பாவத்திற்கு ஆளாவார்.ஆனால் மக்களுடைய மற்றப்பாவங்கள், அவர்கள் கூறும் பழிப்புரைகள் அனைத்தும் அவர்களுக்கு மன்னிக்கப்படும். ””இவனைத் தீய ஆவி பிடித்திருக்கிறது” என்று தம்மைப்பற்றி அவர்கள் சொல்லிவந்ததால் இயேசு இவ்வாறு கூறினார். அப்பொழுது அவருடைய தாயும் சகோதரர்களும் வந்து வெளியே நின்று கொண்டு அவரை வரச்சொல்லி ஆள் அனுப்பினார்கள். அவரைச் சூழ்ந்து மக்கள் கூட்டம் அமர்ந்திருந்தது. ”அதோ, உம் தாயும் சகோதரர்களும் சகோதரிகளும் வெளியே நின்றுகொண்டு உம்மைத் தேடுகிறார்கள்” என்று அவரிடம் சொன்னார்கள்.அவர் அவர்களைப்பார்த்து, ”என்தாயும் என் சகோதரர்களும் யார்? என்று கேட்டு,தம்மைச்சூழ்ந்து அமர்ந்திருந்தவர்களைச் சுற்றிலும் பார்த்து, ”இதோ! என்தாயும் என்சகோதரர்களும் இவர்களே.கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என்சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்” என்றார்.

**தியானம்:** பொதுக்காலத்தின் பத்தாவது ஞாயிறுவார இறைவார்த்தைப் பகுதிகள், எமது திருமுழுக்கின் வழியாக தூய ஆவியைப் பெற்றுக்கொண்ட நாம், அவரின் தூண்டுதலின் படிவாழ்ந்து தீமையின் ஆதிக்கத்தை தகர்ந்து, கடவுளின் திருவுளத்தை நிறைறேற்றுகின்ற மக்களாக வாழவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. நற்செய்தியில் பேய்களின் தலைவனைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான் என்று மறைநூல் அறிஞர்கள், யேசுவைபழித்துப் பேசுகின்றார்கள். ஆனால் இயேசுவோ அதைவெகுவாக மறுக்கின்றார். “சாத்தான் சாத்தானை எப்படி ஓட்டமுடியும் என்று கேட்டு தூய ஆவியின் வல்லமையால் தான் இயேசு சாத்தானை விரட்டியடிக்கிறார் எனபதனை அவர்களுக்கு விளக்குகிறார். அலகையின் ஆதிக்கத்தை அழித்து மனிதர் வாழ்வில் புது வாழ்வினை இயேசு தொடக்கி வைக்கிறார். இனிமேல் மனிதனை உள்ளின்னின்று இயக்குவது தூய ஆவியே. அவரே இறைவார்த்தைக்கும், அருட்சாதனங்களுக்கும் ஊற்று. மீட்பினை நம்மில் தொடக்கி அதை முழுமையாக்குபவரும் அவரே. குறிப்பாக பாவமன்னிப்பை நமக்கு அவர் வழங்குகிறார். எனவே அவரைப் பழித்துரைப்பது கடவுள் தரும் மீட்பை ஒட்டுமொத்தமாக அவமதிப்பதற்குச்சமம். ஆகவே தான் அந்தப்பாவம் மன்னிக்கப் படமாட்டாது என்று இயேசு கூறுகிறார். எனவேதான் திருமுழுக்கின் மூலமாக தூய ஆவியைப் பெற்றுக்கொண்டுள்ள நாம் அவரின் தூண்டுதலின் படிவாழும் பொழுது தீமையின் ஆதிக்கத்தை தகர்த்துவிட முடியும். அவ்வாறு தூய்மையில் ஆவியின் ஆலயங்களாக வாழும் பொழுது கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுகின்ற மக்களாவோம். இயேசுவின் முதன்மை உறவுகளாவோம்.